**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>**

**முன்னிலை:**-திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>பல்வகை மனு எண்.47/2026</u>**
**<u>CNR No.TNED13-000169-2026</u>**

ஆ.சௌமியா, வயது 32, க/பெ.மோகன்ராஜ்,
55, குறுக்குவலசு, இச்சிப்பாளையம், ஈரோடு மாவட்டம்.
- மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி

//எதிர்//

காவல் ஆய்வாளர், கொடுமுடி காவல் நிலையம்,
குற்ற எண்.209/2023.
- எதிர்மனுதாரர்/குற்றம்சாட்டுபவர்

இம்மனு 10.03.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும் ஆஜராகியும், மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி TN 33 BV 7908 என்ற பதிவெண் கொண்ட JCB வாகனத்தின் அசல் பதிவுச் சான்றினை ஒரு மாத காலத்திற்கு இடக்கால பொறுப்பில் தன்னிடம் ஒப்படைக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரிமீது இ.த.ச.பிரிவு 379 மற்றும் 21(1) of Mines and Minerals Development and Regulation Act 1957ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு பாத்தியப்பட்ட JCB பதிவு எண்.TN 33 BV 7908 என்ற வண்டியை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு மாண்புமிகு மாவட்ட முதன்மை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:29:09 +0530

நீதிமன்றம், ஈரோடு நீதிமன்ற CRL. RP No.3330/2023ல் 14.12.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி நிபந்தனையின் பேரில் மனுதாரர் இடைக்காலமாக நீதிமன்றத்தில் இருந்து திருப்பி பெற்றுக்கொண்டார். மேற்படி JCB–ஐ திருப்பி பெற்றுக்கொண்டபோது JCB பதிவு சான்றின் அசலை கொடுமுடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தற்போது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட JCB–ன் தகுதி சான்று பெற வேண்டி JCB–ன் அசல் பதிவு சான்று தேவைப்படுகிறது. ஆகவே JCB–ன் பதிவுச் சான்றிதழ் அசலை ஒரு மாத காலத்திற்கு இடக்கால பொறுப்பில் தன்னிடம் ஒப்படைக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பிற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையில் மனுதாரர் வசம் மேற்படி வாகனத்தின் அசல் பதிவு சான்றினை ஒப்படைத்தால் மனுதாரர் வாகனத்தை விற்பனை செய்துவிட வாய்ப்புள்ளது என்றும், மேலும் வழக்கு விசாரணைக்கு தேவையானபோது வாகனத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த மாட்டார் என்றும், மேலும் இவ்வழக்கானது புலன் விசாரணை முடிவடையாமல் உள்ளதாலும் வாகனத்தின் அசல் பதிவு சான்றினை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடுமையாக ஆட்சேபணை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி தரப்பில் TN 33 BV 7908 என்ற பதிவெண் கொண்ட JCB வாகனத்தின் தகுதி சான்று பெற வேண்டி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்படி JCB வாகனத்தின் அசல் பதிவு சான்று கோரி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார். அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில் மனுதாரர் வசம் மேற்படி வாகனத்தின் அசல் பதிவு சான்றினை ஒப்படைத்தால் மனுதாரர் வாகனத்தை விற்பனை செய்துவிட வாய்ப்புள்ளது என்றும், மேலும் வழக்கு விசாரணைக்கு தேவையானபோது வாகனத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த மாட்டார் என்றும், மேலும் இவ்வழக்கானது புலன் விசாரணை முடிவடையாமல் உள்ளதாலும் வாகனத்தின் அசல் பதிவு சான்றினை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடுமையாக

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.10 17:29:19 +0530

ஆட்சேபணை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி TN 33 BV 7908 என்ற பதிவெண் கொண்ட JCB வாகனத்தின் தகுதி சான்று பெற அசல் பதிவு சான்று அவசியமானது என்று குறிப்பிட்டதன் அடிப்படையில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்ட ***Sunderbhai Ambalal Desai //VS// State of Gujarat*** என்ற வழக்கின் தீர்ப்பின்படி TN 33 BV 7908 என்ற பதிவெண் கொண்ட JCB வாகனத்தின் தகுதி சான்று பெற அசல் பதிவு சான்றை மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி வசம் இடைக்காலமாக ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என முடிவு செய்து கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அசல் பதிவு சான்றை நீதிமன்றத்தில் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும், அதற்கான உறுதிமொழி ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.10 17:29:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.